KALANJIYAM – International Journal of Tamil Studies
ISSN 2456-5148 (Online)
ngmtamil.in

RESEARCH ARTICLE

# நாலடியாரில் புல்லினங்கள்

*Bird Species in Naladiyar*

**முனைவர் மீனாட்சி ச.**

உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி., India

How to cite

ச., மு. மீ. (2026). நாலடியாரில் புல்லினங்கள். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 125–133. https://ngmtamil.in/journal-article/%e0%ae%a8%e0%ae%be%e0%ae%b2%e0%ae%9f%e0%ae%bf%e0%ae%af%e0%ae%be%e0%ae%b0%e0%ae%bf%e0%ae%b2%e0%af%8d-%e0%ae%aa%e0%af%81%e0%ae%b2%e0%af%8d%e0%ae%b2%e0%ae%bf%e0%ae%a9%e0

Vol. 10, No. 02 (September 2026), pp. 125–133

Received: 30 Sep 2026 · Accepted: 4 Oct 2026

© 2026 The Author(s). This open-access article is distributed under the terms of the CC BY 4.0 licence (https://creativecommons.org/licenses/by/4.0/).

Downloaded from ngmtamil.in on 5 October 2026

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 125–133
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# நாலடியாரில் புல்லினங்கள்

*Bird Species in Naladiyar*

**முனைவர் மீனாட்சி ச.***

உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் மீனாட்சி ச. — meenakshis-tam@sfrcollege.edu.in

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | — | 30 September 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | KALN-2026-00006 |

## ஆய்வுச்சுருக்கம்

அறநூல்கள் எனப் பகுக்கப்பெற்ற நாலடியார் காலத்தால் அழியாத ஆவணங்களாகும். அரிய அறச்சிந்தனைகள் அறிவியல் கூறும் அறுதியிடப்பட்ட இலக்கிய வடிவமாக மதிக்கப்படுகின்றன. அறமும், அறிவியலும் இழைந்து செல்லும் இயல்பினைக் கொண்டதாக நாலடியார் திகழ்கின்றது. பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழும் தன்மையினை உடையவர்கள். இலக்கியங்களில் புலவர்கள் தங்கள் கருத்தினை புலப்படுத்தும் வண்ணம் தாம் காணும் தாவரங்களை உவமையாகவும் உள்ளுறையாகவும் சுட்டுகின்றனர். புலவர்களின் இத்தகைய உத்திமுறைகளே பண்டைத்தமிழர்களின் தாவரவியலறிவுக்குத் தக்கச் சான்றாகும். தாவரங்களை வளரியல்பின் அடிப்படையில் தாவரவியலாளர் புல், செடி, கொடி, மரம், மலர் என்று பாகுபடுத்துகின்றனர். வளரியல்பில் முதன்மை இடத்தைப் பெறுகின்ற புல்லினங்களின் தன்மை மற்றும் வாழிடங்கள் அறிவியல் காரணத்தோடு நாலடியார் வழி எடுத்தியம்பப்படுகின்றது. மேலும் புல்லினங்களின் அறிவியல் பெயர், வகைபாடு மற்றும் மருத்துவ பயன்களையும் நாலடியார் வழி ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## Abstract

Naladiyar*, classified among the texts on ethics (*Aranoolgal*), stands as a timeless document. It is revered for its profound ethical insights, which are presented through a well-defined literary structure that aligns with scientific principles. The text exemplifies an intrinsic blend of ethics and science. Ancient Tamils lived in harmony with nature; in their literature, poets frequently employed the flora they observed as similes and metaphors to convey their ideas. These poetic techniques serve as compelling evidence of the ancient Tamils' botanical knowledge. Botanists classify plants based on their growth habits—categorizing them as grasses, shrubs, creepers, trees, or flowering plants. *Naladiyar* elucidates the characteristics and habitats of grass species—which hold a primary place among these growth forms—offering explanations grounded in scientific reasoning. Furthermore, this research paper examines the scientific names, classifications, and medicinal uses of these grass species as presented in *Naladiyar*.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ச., மு. மீ. (2026). நாலடியாரில் புல்லினங்கள். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 125–133.

**புல்லினங்கள்**

புல் என்பது ஒரு வித்திலைத்தாவரமாகும். இயற்கையின் வரங்களான செடி, கொடி மற்றும் மரங்களின் பெரும்பகுதி புல் வகையினைச் சார்ந்தவையாகும். பிற தாவரங்களைப் போல் நுனிப்பகுதியில் வளராமல் அடிப்பகுதியில் உள்ள கணுக்களிலிருந்து இஃது வளர்கின்றது. கிளைகளின்றி நேராகவும், வளைந்தும் வளரும் தன்மையுடையன. தொல்காப்பியர் புல் பற்றி,

"புறக்கா ழனவே புல்லெனப் படுமே" (இளம்பூரணார்,தொல்,மரபு,நூற்.630)

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். புறக்காழ் என்பது தண்டின் மையப்பகுதியில் உள்ளீடற்ற தாவரங்களே புல்லினமாகும். தொல்காப்பியரின் நூற்பாவிற்கு உரை வகுக்கும் இளம்பூரணார், "தெங்கு, பனை, கமுகு, மூங்கில்"[1] முதலாயின புல் என்று குறிப்பிடுகின்றார். புல்லின் உறுப்புகளை தொல்காப்பியர்,

"தோடே, மடலே, ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்" (இளம்பூரணார்,தொல்,மரபு,நூற்.632)

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு முதலியன புல்லின் உறுப்புகளாகும். இனம்பூரணார் புல்லின் உறுப்புகளை உடைய "வாழை, ஈந்து, தாமரை, கழுநீர் என்றுத் தொடக்கத்தன"[2] என்று குறிப்பிடுகின்றார். ஆக தொல்காப்பியரின் கூற்றுப்படி தெங்கு, பனை, கமுகு, மூங்கில், வாழை, ஈந்து, தாமரை மற்றும் கழுநீர் ஆகியன புல்லின வகையினைச் சார்ந்தவையாகும். புல் வகையினைப் பற்றி இல.தாணம்மாள், "நிலத்தின் அடிப்பகுதி வரை ஆழ்ந்து வேர்கள் செல்லாமல் மேலோட்டமாய் வேர்கள் உடையனவாக விளங்கும் தாவரங்கள் 'புல் வகை' எனப்படும்"[3] என்று தன் நூலில் குறிப்பிடுகின்றார். நாலடியாரில் இடம்பெற்றுள்ள புல் வகைகளை,

- ❖ புல்
- ❖ நெல்
- ❖ கரும்பு
- ❖ தென்னை
- ❖ பனை
- ❖ பாக்கு
- ❖ வாழை

என்ற முறைகளில் பட்டியலிட்டு நாலடியாரின் வழி புல்லின் தன்மையினை ஆராயலாம்.

**புல்**

புற்கள் அடர்ந்து நீளமாக காணப்படும் ஒரு தாவர வகை ஆகும். மனிதனின் முயற்சியின்றி மழையின் வருகையால் தானாக வளரும் தன்மையுடையது. பரந்து விரிந்து வளரும் புல்வெளிகள் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுகின்றன. இதனடிப்படையில் புற்களை, "1. மேய்ச்சல் புல் (Grazing grass) 2. வெட்டுப்புல் (Fodder grass)"[4] என்று இரண்டு முறைகளில் குறிப்பிடுகின்றன. மேய்ச்சல் புல் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படும் முறையினை (நான்மணி – 68) வது பாடல் சுட்டுகின்றது. கிளைகளின்றி வளைந்து வளரும் புல்லின் தன்மையை உடல் நிலையாமையுடன் நாலடி ஒப்பிடும் பாங்கினை,

"புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி

இன்னினியே செய்க அறவினை..... (இளவழகனார்,நாலடி.பா.அடிகள்29:1-2)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. மேலும் இப்புற்களை களைகின்ற தன்மையினை,

“சாய்பறிக்க நீர்திகழுந் தண்வய லூரன்மீது

ஈப்பறக்க நொந்தேனும் யானேமன்...” (இளவழகனார்,நாலடி.பா.அடிகள்.389:1-2)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. நிலத்தைச் சூழ்ந்துள்ள கோரைப் புற்களை பறித்துள்ள குளிர்ந்த வயல்வெளிகளை உடைய மருதநிலத் தலைவனே! என்று புல்லின் இயல்பினை வெளிப்படுத்துகின்றது. நீண்டு வளரும் புற்கள் காகித தயாரிப்பிலும், குடிசைகள் வேயவும் பயன்படுகின்றன. இலக்கியங்கள் புற்களின் தன்மை மற்றும் வளர்ச்சியினைக் கொண்டு மாந்தர்களை நெறிப்படுத்துகின்றன. அறக்கருத்தோடு அறிவியலும் ஊடுருவும் தன்மையினை அறிய முடிகின்றது.

**நெல்**

நெல் புல் வகையினைச் சார்ந்த தாவரமாகும். நெற்பயிர் நான்கு அடி உயரம் வரை வளரக்கூடியது. இப்பயிர் ஐந்து மாதங்கள் வரை வளரக்கூடிய ஓர் ஆண்டுத் தாவரமாகும். இலக்கியங்களில் நெல்லின் வகைகளை வெண்ணெல், செந்நெல், மலைநெல், நெல் ஐவனம், தோரை என்ற பெயர்களில் குறிப்பிடப்படுகின்றன. நெற்பயிர்கள் ஈர நிலங்களில் செழித்து வளரக்கூடியது. செழிப்பான இடத்தில் நெல் வளரும் முறையினை,

“நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தங்

குலநலத்தால் ஆகுவர் சான்றோர்.....” (இளவழகனார்,நாலடி.பா.அடிகள்179:1-2)

என்ற பாடலடி விளக்குகின்றன. வயல்வெளிகளில் செந்நெல் செழிப்பாக வளர்வது போல மக்களும் செழித்திருப்பர். மேலும் வளமற்ற பகுதிகளில் நெற்பயிர் செழிக்காது என்பதனையும் நாலடி,

“பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட

மின்னொளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்”

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்:269:1-2)

என்ற பாடலடி சுட்டுகின்றன. ஆக நெற்பயிர்கள் ஈர நிலங்களில் மட்டுமே செழித்து வளரும் என்பதை பண்டைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பதனை அறிய முடிகின்றது. நெல் நமது இந்திய நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தொன்று தொட்டுப் பயிரிடப்பட்டு வரும் உணவுப்பொருள் ஆகும். உணவுப்பொருளாக பயன்படுத்தப்படும் நெல்லிலும் உமி உண்டு என்பதனை,

“நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை

அல்லா ரெனினும் அடக்கிக் கொளல் வேண்டும்

நெல்லுக் குமியுண்டு.....” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்:221:1-3)

என்ற பாடலடி உணர்த்துகின்றன. உமியை நீக்கி நெல்லைப் பயன்படுத்துவது போல நேசித்தவரின் தீய குணங்களை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசிரியர் வழிப்படுத்துவதோடு தற்காலத்தில் நெல்லினை உமி நீக்கி அரிசியாக பயன்படுத்தும் முறையினையும் சுட்டுகின்றார். நெல்லினை பயிரிடும் போது வேண்டாத களைகளை களைந்து நல்விதைகளை விதைத்து பயிரிடும் தன்மையினை,

“செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்

செந்நெல்லே யாகி விளைதலால் - அந்நெல்

வயனிறையக் காய்க்கும் வளவிய லூர!.....”

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்:367:1-3)

என்ற பாடலடி புலப்படுத்துகின்றன. தற்காலத்தில் செயற்கை ஒட்டு முறையில் பல வகைப்பட்ட நெல் வகைகள் உருவாக்கப்படுகின்றன. எனவே நமது பாரம்பரிய நெல் வகைகள் அழிந்து விட்டன என்பதை யாவரும் அறிவோம்.

**கரும்பு**

கரும்பு தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் வளர்க்கப்படும் தாவரமாகும். புல் இனத்தைச் சேர்ந்தது. ஓராண்டு காலப் பயிராகும். இஃது பணம் கொழிக்கும் ஒரு வாணிகப் பயிராகும். சர்க்கரை உற்பத்தி செய்யப் பயன்படும் ஒரு தாவரமாகும். கரும்பிலிருந்து பெறப்படும் முக்கியப் பொருள் சுக்ரோஸ் ஆகும். இதன் வேதிப்பொருள் கரும்பின் தண்டுப்பகுதிகளில் சேர்த்து வைக்கப்படுகிறது. கரும்பானது செங்கரும்பு, ஆலைக்கரும்பு, கருப்புக்கரும்பு என்றெல்லாம் வகைபடுத்தப்படுகின்றன. இவற்றுள் ஆலைக்கரும்பு சாறு பிழிவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இயந்திரப் பொறிகளைக் கொண்டு சாறு பிழியும் வழக்கம் பண்டைக்காலத்திலும் இருந்திருந்தன. கரும்புச்சாற்றின் இனிமையையும், சாறு பிழியும் நேரத்தினையும் நாலடியார்,

“கடித்துக் கரும்பினைக் கண்தகர நாறி,

இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்”

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்156:1-2)

“கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்

துரும்பெழுந்து வேம்கால் துயராண் டுழவார்”

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்:35:1-2)

என்ற பாடலடிகளில் பதிவு செய்துள்ளார். இன்றைக்கும் நாம் கரும்பு பிழியும் இயந்திரத்தினை பயன்படுத்தி வருகின்றோம். கரும்பின் சாறு சிறுநீரகக் கற்களை குணமாக்குகின்றன. இவற்றில் உள்ள இனிப்பு இரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவை சீராக்குகின்றன. ஒரே கரும்பானாலும் கரும்பின் சுவை வெவ்வேறானது. நுனிக் கரும்பை விட அடிக்கரும்பின் சுவையே இனியது. இத்தகைய இனிய சுவையினை கற்றறிந்தார் நட்புடன் ஒப்பிடும் பாங்கினை,

“கற்றறிந்தார் கேண்மை

நுனியின் கரும்புதின் றற்றே – நுனிநீக்கித்

தூரின்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா

ஈரமி லாளர் தொடர்பு” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.138:1-4)

“கருந்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்

குருத்திற் கரும்புதின் றற்றே – குருத்திற்

கெதிர் செலத்தின் றன்ன தகைத்தரோ.......”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.211:1-2)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

தற்காலத்தில் சாறு பிழிந்து எஞ்சிய சக்கை காகிதம் செய்வதற்குப் பயன்படுகின்றன. கரும்பு பாரம்பரியமான உணவாகும். தற்காலத்தில் அதனை பண்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்துகின்றோம். கரும்பின் இலைகள் மக்கி நல் எருவாகின்றன. கரும்பினை அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடவு செய்கின்றனர். உலர்ந்த கரும்புத் தோகைகளை மண்ணோடு கலப்பதால் மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் தன்மை மேம்படுகின்றது. இதனால் மண்ணின்

மின்கடத்தும் திறன் குறைந்து நீரைத் தக்க வைக்கும் திறன் அதிகரிக்கிறது. கரும்பிலுள்ள ‘அல்கலைன்’ என்னும் பொருள், புற்றுநோயை குணப்படுத்தும் தன்மையுடையது. மேலும் பெருங்குடல், நுரையீரல் (அ) மார்பக புற்றுநோய் போன்றவற்றிற்கும் சிறந்தது. தற்காலத்தில் கரும்பினை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இலக்கியங்கள் கரும்பின் சுவையினை புலப்படுத்துவதோடு கரும்புத் தோட்டத்தினை பாதுகாக்கும் முறையினையும் பறை சாற்றுகின்றன.

**தென்னை**

தென்னை எண்ணெய் வித்து தாவரமாகும். பனைமரத்தை விட உயரமாக வளரக்கூடியது. முட்களும் கிளைகளும் இன்றி உயரமாக வளர்ந்தாலும் தென்னை புல் இனத்தைச் சார்ந்ததாகும். எண்ணற்ற வேர்கள் எல்லாப் பக்கமும் ஓடக்கூடியவை. மரத்தின் உச்சியிலுள்ள இலைகள் மரத்துக்கு மணிமுடி போல் அழகிய தோற்றத்தைத் தரும். தென்னையினை அடிக்கடி நீர்ப்பாய்ச்சி கவனித்தால் மட்டுமே மரம் செழுமையாக இருக்கும் என்பதனை,

“.......ஏனை

இடையாயார் தெங்கி னணையர்,....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.216:1-2)

என்ற பாடலடி விளக்குகின்றன. இம்மரம் ஏறத்தாழ ஐந்து வருடங்களுக்குள் பயன்தரக் கூடியதாகும். கடலோர உவர் நிலங்களிலும், மணற்பாங்கான இடத்திலும் தென்னை வளரக்கூடியது. நல்ல மழையும் சூரிய ஒளியும் கிடைக்கும் இடங்களில் இஃது நன்கு வளரக்கூடியது. எல்லா வகை மண்ணிலும் வளரும் தன்மை உடையது. இலக்கியங்களில் தென்னை ‘தெங்கு’ என்றே அழைக்கப்படுகின்றது. தென்னையின் வாழிடங்களை,

“எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகாது

எந்நாட் டவருஞ் சுவர்க்கம் புகதலால்....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.243:1-2)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன. நீர்வளம் மிகுந்த பகுதியிலும் எந்த வகை மண்ணிலும் தென்னை வளரும் தன்மையுடையது என்பதனை அறிய முடிகின்றது. தென்னையின் ஓலை, பூ, இளங்காய், முற்றின காய், நடுமரம், வேர் என்று அனைத்தும் பயன்தரக்கூடியது. தென்னையின் ஓலை வீடுகட்டவும், கொட்டகை போடவும், கூடை பின்னவும் பயன்படுகின்றது. தேங்காயின் தண்ணீர் ஜீரணமண்டலத்தை வலுப்படுத்த உதவும். இவற்றின் வேரை கசாயமிட்டு பருக படை, சொறி, தோல் நோய், நாக்கு வறட்சி போன்றவை குணமாகின்றன. தேங்காயின் சதைப்பகுதியைச் சர்க்கரையுடன் சேர்த்து சாப்பிட்டால் ஆண்மை சக்தியை அதிகரித்து வயிற்றுப் பூச்சிகளைச் சாகடிக்கிறது.

**பனை**

பண்டைத் தமிழர்களின் கற்பக விருட்சம் பனை. பழந்தமிழர்களின் வாழ்வில் பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்தவை. தமிழ்நாட்டின் சின்னம் பனை. தமிழ்நாட்டில் மட்டுமே 5.2 கோடி பனைமரங்கள் உள்ளன. இது ஏறத்தாழ 60 சதவீதம் ஆகும். பூக்கும் ஒரு வித்திலைத் தாவரமாகும். இஃது பயிரிடப்படுவதில்லை. இயற்கையிலேயே வளரக்கூடியது. இவை சுமார் 20 மீ உயரத்துக்கு கிளைகளின்றி நேராக வளரும் தன்மையுடையது. நீண்டு உயரினும் இஃது புல் வகையினைச் சார்ந்ததாகும். பனையினைப் பற்றி எஸ்.சௌந்தரராஜன், “பனைமரம் பாமேசியீ என்னும் ஒற்றை விதையிலைத் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். பனை மரத்தின் பெயர் போரஸஸ் பிளாடெல்லிபெர் என்பதாகும். இம்மரத்தின் ஓலைகள் விசிறி போன்ற அமைப்புடையதாக இருப்பதால் இதனை ‘Palm tree’ என்று கூறுவர்.”[5] என்ற முறைகளில்

தன் நூலில் குறிப்பிடுகின்றார். சேர மன்னர்களின் குடிப்பூ பனையாகும். இம்மரம் சதுப்பு நிலங்களிலும், கடற்கரை ஓரங்களிலும் வளரக் கூடியதாகும். இவை பாலை நிலம், வறட்சிப்பகுதி, குறைந்த ஆழமான நிலம் போன்ற இடங்களில் காணப்படுகின்றது. வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் உடையது. இவை மக்களுக்கு உச்சி முதல் அடி வரை பயன்தரக் கூடியது. இதன் அடிப்பகுதி பருத்துக் காணப்படும். பனையின் இலைகள் ‘மடல்’ என்றும், காய்ந்த இலை ‘ஓலை’ என்றும், காய் ‘நுங்கு’ என்றும், பனங்காய் முதிர்ந்தால் ‘பனம்பழம்’ என்றும் அழைக்கப்படுகின்றன. பனையின் வளரியல்புகளை உணர்ந்த பண்டைத்தமிழர்களின் தாவரவியல் புலமையை,

“......எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே

தொன்மை யுடையார் தொடர்பு” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.216:3-4)

என்ற பாடலடி விளக்குகின்றன. பனை பருவம் அடைவதற்குள் பதினைந்து வருடங்கள் எடுத்துக் கொள்கின்றது என்பதனையும் வறட்சியைத் தாங்கி உப்பங்கழிகளில் வளரும் தன்மை உடையது என்பதனையும் அறிய முடிகின்றது. மனிதர்களின் பண்பினை பனையின் உயரத்துடன் ஒப்பிடும் பழந்தமிழர்களின் நுண்ணியத் திறனை,

“தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்

பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்105:1-2)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இதே கருத்தினை (நாலடி-344) வது பாடலும் எடுத்துரைக்கின்றன.

பனையில் ஆண், பெண் என்ற இரண்டு வகைகள் உள்ளன. இவற்றில் பாலினப்பெருக்கம், விதையில்லா பெருக்கம் என்ற இரண்டு முறைகளில் இனப்பெருக்கம் நிகழ்கின்றது. பூக்களில் தோன்றும் வித்துகள் வழி நடைபெறுவது பாலினப்பெருக்கம் ஆகும். தண்டு மற்றும் கிழங்கு மூலம் விதையில்லாமல் நடைபெறுவது விதையில்லா பெருக்கம் ஆகும். பெண்பனையில் பதநீர் இறக்கப்படுகிறது. பெண்பனையின் முக்கியத்துவத்தை அறிந்த பழந்தமிழரின் நுண்மாண்நுழைபுலத் திறனை,

“நடுவூருள் வேதினை சுற்றுக்கோட் புக்க

படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்96:1-2)

என்ற பாடலடி சுட்டுகின்றன. காய்க்கின்ற பெண்பனையை அனைவரும் விரும்புவர். காய்த்தலில்லாத ஆண்பனையை விரும்புபவர் எவரும் இல்லை. பெண்பனையின் உணவுப்பொருட்களில் முதன்மையானது பதநீர். இப்பதநீரே கருப்பட்டி, வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பனம்மிட்டாய், பனங்கூழ் என்று பல்வேறு வகையான பொருள்களை தயாரிக்க இன்றும் பயன்படுகின்றது. ஆண்பனை கட்டிட வேலைக்கு பயன்படுத்தப்படுகின்றது.

பனையை போந்தை, பெண்ணை என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பனைஓலையின் பயன்பாட்டினை,

“......பனையின் மேல்

வற்றிய ஓலை கலகலக்கும், எஞ்ஞான்றும்

பச்சோலைக் கில்லை யொலி” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.256:2-4)

“கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி

அடகு பறித்துக்கொண் டட்டுக் - குடைகலனா

உப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே.....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்289:1-3)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. பனை ஓலையில் கூடை, பெட்டி, பாய், விசிறி, தொப்பி, குடை, ஓலைச்சுவடி என்று பல்வேறான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

பனை உணவுப்பொருட்கள் வழங்குவதோடு பல்லோருக்கு பனைமரம் ஏறுதல், கள் மற்றும் பதநீர் இறக்குதல், கருப்பட்டி மற்றும் பனைவெல்லாம் தயாரித்தல் என்று கைத்தொழிலாகவும் பயன் அளிக்கின்றது. “விவசாயம் கைத்தறிக்கு அடுத்தப்படியாக பேரளவு வேலை வாய்ப்பினைக் கொண்டதாக பனைத்தொழில் விளங்குகிறது.”[6] என்று இணையம் உரைக்கின்றது. துவர்ப்பும் இனிப்பும் கலந்த பதநீரின் சுவை உடலுக்கு ஊட்டத்தை அளிப்பதோடு வெப்பத்தைத் தணித்து குளிர்ச்சியைத் தருவது பனம்பழம் சிறந்த உயிர்சத்து உடையது. பனைவெல்லாம் நிலக்கரி மற்றும் ஸிலிகா தூசிகளால் ஏற்படும் நுரையீரல் பாதிப்பை குறைக்கும் என்பது தெரிய வருகின்றது. தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமான பனைமரங்கள் வளர்க்கப்பட வேண்டும். பனைமரங்கள் அழிவதால் மண்வளமும் மனிதவளமும் கெடுகிறது.

**பாக்கு**

பாக்கு ஒரு வித்திலைத் தாவரம் ஆகும். இலக்கியங்களில் கமுகு என்று அழைக்கப்படுகின்றது. இஃது நெடிது ஓங்கி வளரினும் ‘புல்’ என்ற வகையினைச் சார்ந்ததாகும். இதனது தாவரவியல் பெயர் அரீகா காட்சூ (Areca catechul) என்பதாகும். பொதுவாக பாக்கு தென்னையைப் போல் கடற்கரைச் சார்ந்த உப்பு மண்ணில் நன்றாக வளரும் தன்மை கொண்டது. இதன் தண்டு வெண்மையாக வழவழப்பாக இருக்கும். இவற்றின் இலை சிறகு வடிவக் கூட்டிலையின் பட்டை அகலமாக தண்டைச் சுற்றிக் குருத்துக்குப் பாதுகாப்பாக இருக்கும். கடற்கரையோரப் பகுதிகளிலும் மலையடிவாரங்களிலும் இஃது பயிரிடப்படுகின்றது. கமுகின் தன்மையினை நாலடி,

“கடையாயார் நட்பிற் கமுகளையர் ஏனை..”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.216:1)

என்ற பாடலடியில் குறிப்பிடுகின்றார். கீழ்நிலையில் உள்ளோரின் நட்பை கமுகின் தன்மையோடு ஒப்பிட்டுள்ள பண்டைத் தமிழரின் தாவரவியல் புலமை அளவிடற்கரியது. தமிழர்களின் சடங்கு மற்றும் விழாக்களில் அதிகளவு வெற்றிலையுடன் சேர்த்து பயன்படுத்தப்படுகின்றது. பாக்கின் மருத்துவத் தன்மையினை ஜே.சி.குரியன் தன் நூலில், “பிஞ்சு பாக்குக் கொட்டைகள் மலமிளக்கியாகும். முதிர்ந்த பாக்குக் கொட்டைகள் ஒரு நல்ல புழுக்கொல்லியாகும்.”[7] என்ற முறைகளில் குறிப்பிடுகின்றார். அதிகளவு பாக்கினை எடுத்துக் கொண்டால் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது. அர்கோலின் என்னும் நச்சுத்தன்மை வாய்ந்த அல்கலாய்டு கொட்டையில் நிரம்பியுள்ளதால் பக்கவாதத்தை தோற்றுவிக்கும்.”[8] என்பதை இணையம் வழி அறிய முடிகின்றது. இன்றும் பாக்கு மங்கலப்பொருளாக பயன்படுத்தப்படுகின்றது.

**வாழை**

வாழை குறுகிய கால பயிராகும். தாவரவியலாளர் இதனை “Musa Paradisiaca” என்று குறிப்பிடுவர். உறுதியாக உயர வளரும் வாழையை மரம் என்று பேச்சுவழக்கில் குறிப்பிட்டாலும் இஃது புல் இனத்தைச் சார்ந்ததாகும். வாழையினங்கள் செடி மற்றும் மரங்களைப் போல் காணப்படுவதில்லை. இவற்றின் தண்டுப்பகுதி கிழங்கு வடிவில் மண்ணுக்கடியில் மட்டுமே வளர்கிறது. மேல்பகுதியானது நிலைகுத்தாக வளரும் போலித்தண்டாகும். எனவே இவை தாவரங்களின் புல் வகையைச் சர்ர்ந்ததாகும்.

இந்தியாவில் மாமரத்திற்கு அடுத்து வாழையே அதிகமான நிலப்பரப்பில் பயிரிடப்படுகின்றன. தமிழ்நாட்டில் தலைசிறந்த முக்கனிகள் மா, பலா, வாழை என்பதாகும். வாழையின் காய், கனி, தண்டு, இலை, பட்டை முதலிய அனைத்து பாகங்களும் உணவிற்குப் பயன்படுகின்றன. வாழை மலைப்பகுதிகளிலும், நீர்வளம் மிகுந்த நிலங்களிலும், வயலோரங்களிலும் அதிகமாக வளரும் தன்மை கொண்டது. வாழையினங்கள் கனிகளைப் பெறுவதற்காகவும், அலங்காரச் செடியாகவும், நார் பெறுவதற்காகவும் பயிரிடப்படுகின்றன. தென்னை மற்றும் வாழை பயிரிடுவதே ஒரு நாட்டின் செழுமை என்று குறிப்பிடுவதாக முடத்தாமக்கண்ணியார்,

“கோள் தெங்கின் குலை வாழை”

(பொ.வே.சோமசுந்தரனார்,பொருநராற்றுப்படை,பா.அ:205)

என்ற பாடலடிகளில் குறிப்பிடுகின்றார். வாழையில் பூவன், மொந்தன், பேயன் என்ற மூவகையான பழங்கள் முறையே அயன், அரி, அரன் என்ற மூவர்க்கும் உரியன என்று பாரம்பரியாக நம்பப்படுகின்றது. வாழைப்பழங்கள் மிகவும் இனிது. இவற்றின் சுவையை நாலடி,

“வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்

தீஞ்சுவை யாதுந் திரியாதாம்…..” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.244:1-2)

என்ற பாடலடி குறிப்பிடுகின்றது. வேப்ப மரத்தின் இலைக்குள்ளிருந்து பழுத்தாலும் வாழைப்பழம் தனது இன்சுவையில் இருந்து மாறுபடாது என்று குறிப்பிடுவதன் மூலம் வாழையின் இனிய சுவையினை அறிய முடிகின்றது. வாழையின் தன்மையினை கு.சீநிவாசன் தன் நூலில், “வாழைமரம் ஒரு முறை மட்டுமே பூக்கும். வாழைக்குலையில் கருஞ்செம்மையான மடல்கள் இருக்கும். இம்மடல்களுக்குள் வாழை மலர்கள் சீப்புச்சீப்பாக அமைந்திருக்கும். வாழைக்குலையை வாழைத்தார் என்பர். தாரின் நுனிப்பகுதியில் ஆண்பூக்களும், அடிப்பகுதியில் பெண்பூக்களும் உண்டாகும். மடல் விரிந்து ஆண் பூக்களின் தாதுக்கள் பெண் பூக்களின் நுனியில் சேர்ந்தபின் பெண்பூக்கள் பிஞ்சாகிப் பழமாகும்”[9] என்ற முறைகளில் குறிப்பிடுகின்றார்.

வாழை ரகங்கள் நிலத்திற்கு ஏற்ப பயிரிடப்படுகின்றன. வாழையின் அனைத்து பாகங்களும் மருத்துவ குணமாகும். இவற்றின் இலை நச்சுமுறிப்பாகவும், நார் பூச்சரம் கட்டவும், மூக்குப்பொடி வைக்கும் மட்டையாகவும், நூல் தயாரித்து துணி நெய்யவும் பயன்படுகின்றன. இவற்றின் தண்டுநீர் இரத்த போக்கை குணப்படுத்தவும் பட்டை மற்றும் தண்டானது பித்தத்தைக் கட்டுபடுத்தவும், சிறுநீரைப் பெருக்கவும் பயன்படுகின்றது. வாழையின் பூ, பிஞ்சு, காய் போன்றன துவர்ப்புச் சுவையைத் தூண்டும், வெள்ளைப்படுதலையும் கட்டுப்படுத்தும். மேலும் வாழைப்பழமானது உள்ளுறுப்புகளின் புண்களை ஆற்றுகின்ற திறனுடையது.

## தொகுப்புரை

- பழந்தமிழரின் திணைப்பாகுபாடே அவர்களது தாவரவியல் புலமையினை அறிவதற்கு சிறந்த சான்றாகிய முறையினை அறிந்து கொள்ள முடிகின்றது.
- தாவரங்களின் நுட்பமான வளரியல்புகளை அறிந்திருந்த பண்டைத்தமிழனின் தாவரவியல் சிந்தனை நாலடியார் வழி வெளிக்கொணரப்படுகின்றது.
- தாவரவியலாளரின் கருத்தோடு ஒன்றிணைந்த இலக்கியப் புலவர்கள் தங்களது படைப்புகளில் தாவரங்களின் பசுமையினை தன் எழுத்தில் படைத்ததோடு தாவரங்களின் வகைபாட்டினையும் மருத்துவ பயன்பாட்டினையும் நுட்பமாக பதிவு செய்த புலவனின் நுண்மாண்நுழைபுலத்திறன் அளவிடற்கரியது.

- ➢ தாவரங்கள் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றது
- ➢ தாவரங்களின் அனைத்து உறுப்புகளும் மனிதர்களுக்கு சிறந்த மருத்துவ குணமுடையதாக பயன்படுத்துகின்ற பாங்கினை அறிய முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**


1. இளம்பூரணார்,தொல்,மரபு,ப.529
2. இளம்பூரணார்,தொல்,மரபு,ப.530
3. இல.தாணம்மாள், சங்க இலக்கியத்தில் மலர்கள், ப.56
4. **ta.wikipedia.org\wiki\புல்**
5. எஸ்.சௌந்தர ராஜன், பனைமரங்களின் மூலம் கிராம முன்னேற்றம் 2014,ப.128
6. **ta.wikipedia.org\wiki\பனை16.11.2019**
7. ஜே.சி.குரியன், நலம் தரும் தாவரங்கள்(தொகுதி1),ப.20
8. **tamil vu.org\tdb\titles**
9. கு.சீநிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள், ப.665–666


© 2026 முனைவர் மீனாட்சி ச.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..